# COVID-19

உங்கள் சுவாசப்பாதையில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரி நீங்கள் புதிய COVID-19 கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதைக் காட்டுகிறது.

## COVID-19-ன் அறிகுறிகள்

காய்ச்சல், தொண்டை வலி, தலைவலி, தசை வலி, இருமல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் ஆகியவை பொதுவான அறிகுறிகளாகும்.

---

## சிகிச்சை

### உங்களுக்கு COVID-19 இன் லேசான அறிகுறிகள் இருந்தால்

உங்கள் நிலைமை மோசமாக இல்லாவிட்டால், நீங்கள் மருத்துவமனையில் தங்கத் தேவையில்லை என்றால், நீங்கள் வீட்டிற்கு அனுப்பப்படுவீர்கள். 'நீங்கள் வீடு திரும்பும்போது' என்பதன் கீழ் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்.

### நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போது, மேலும் பரிசோதனை தேவையா என்பதை நாங்கள் மதிப்பிடுவோம்

### நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போது, ஆக்ஸிஜன் மற்றும் ஆண்டிபயாடிக் மருந்துகள் போன்ற உதவி சிகிச்சையை நாங்கள் வழங்குவோம்

### அரிதான சந்தர்ப்பங்களில், வென்டிலேட்டர் சிகிச்சை தேவைப்படலாம்

### நீங்கள் மருத்துவமனையில் இருக்கும் காலத்தில் நீங்கள் தனிமையில் இருப்பீர்கள்

### உங்கள் வழக்கமான மருந்துகள்

உங்கள் வழக்கமான மருந்துகளை ஊழியர்களிடமிருந்து பெறுவது ஒரு விதியாகும்.

நீங்கள் பிரத்யோக மருந்து எதுவும் எடுத்துக்கொண்டிருந்தால், பணியாளர்களிடம் கூறவும்.

---

## நீங்கள் வீடு திரும்பியதும்

### நீங்கள் 48 மணி நேரத்திற்கு எந்தவொரு அறிகுறியும் இல்லாமல் இருக்கும் வரை உங்கள் வீட்டிலேயே இருங்கள்

### உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்குத் தொற்று ஏற்படுத்துவதைத் தவிர்க்கவும்

உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க, நீங்கள் கண்டிப்பாகச் செய்யவேண்டியவை:

- நீங்கள் 48 மணி நேரம் அறிகுறிகள் இல்லாமல் இருக்கும் வரை உங்கள் வீட்டிலுள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பைத் தவிர்க்கவும்
- நல்ல கை சுகாதாரத்தைப் பராமரிக்கவும் – உங்கள் கைகளை அடிக்கடி கழுவவும்
- உங்கள் வீடு சுத்தமாக இருப்பதை உறுதிசெய்யுங்கள்

**உங்கள் வீட்டை எப்படி சுத்தம் செய்வது**

தினமும் நீங்கள் பயன்படுத்தும் கழிப்பறை/குளியலறை, சமையலறை மற்றும் அறை(கள்) சாதாரண சுத்தம் செய்யும் பொருட்களால் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

உங்கள் வீட்டில் பகிரப்படும் கழிப்பறை மற்றும் குளியலறை இருந்தால், நீங்கள் அதைப் பயன்படுத்தியவுடன் சுத்தம் செய்ய வேண்டும்.

டவல்கள், படுக்கை விரிப்புகள் மற்றும் உள்ளாடைகளைக் குறைந்தது 80°C வெப்பத்தில் துவைக்கவும். மற்ற ஆடைகளை முடிந்த வரையில் 60°C வெப்பத்தில் துவைக்கவும்.

### உங்கள் நெருங்கிய தொடர்புகளுக்கு தகவல் தெரிவிக்கவும்

நீங்கள் தொடர்பில் இருந்தவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் நெருங்கிய தொடர்புகள் www.sst.dk -ல் உள்ள வழிகாட்டுதலில் விவரிக்கப்பட்டுள்ளபடி பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

---

## எதிர்வரும் நாட்களில்

### உங்கள் அறிகுறிகள் மோசமடைந்தால் உங்கள் மருத்துவர் அல்லது அவசர மருத்துவர் உதவியைத் தொடர்பு கொள்ளவும்.

உதாரணமாக, நீங்கள் மார்பு வலி, காய்ச்சல் மீண்டும் வருதல் அல்லது மூச்சுத் திணறல் ஆகியவற்றை அனுபவித்தால்.

---

## மேலும் தகவல்கள்

### COVID-19 பற்றி மேலும் தகவல்கள்

டேனிஷ் சுகாதார ஆணையம் தனது வலைத்தளத்தைத் ( www.sst.dk ) தொடர்ந்து புதுப்பிக்கிறது.>

புதிய கொரோனா வைரஸ் ஹாட்லைனை 7020 0233 என்ற எண்ணிலும் அழைக்கலாம்.

www.sst.dk-ல் COVID-19 பற்றிய தகவல்காள் பல்வேறு மொழிகளில் கிடைக்கும்.